## DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure )

--

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.57/23 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.2 |
| பெயர் | சண்முகராஜ் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | தனுஷ்கோடி | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.A.Chinnaiah, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 10.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified through his Aadhar card.

1வது எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் தொண்டைமான் விடுதி, மணவிடுதி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மரவியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் தேவேந்திரனை தெரியும். ஆஜர் எதிரி பழனிசாமியை தெரியும். பழனிசாமி அவர் இடத்தில் உள்ள மரத்தை வெட்டுவதற்காக நானும் என்னுடைய பெரியப்பா மகன் ராமமூர்த்தியும் எதிரி பழனிசாமியின் தோப்பில் உள்ள தேக்குமரங்களை பார்ப்பதற்காக சென்றோம். 09.01.2022 தேதியில் காலை 9.00 மணியில் இருந்து 10.00 மணி இருக்கும். அப்போது அந்த இடத்தில் பழனிசாமியும், தேவேந்திரனும் இருந்தார்கள். நாங்கள் பார்வையிட வேண்டிய மரங்களை பழனிசாமி எங்களிடம் காட்டினார். அப்போது தேவேந்திரன் எங்களிடம் பழனிசாமிக்கும் தனக்கும் இட சம்மந்தமான பிரச்சனை இருப்பதால் மரங்களை பார்க்கவேண்டாம் என்று சொன்னார். நாங்கள் வந்துவிட்டோம். இருவருக்கும் இடையே என்ன நடந்தது என்று எங்களுக்கு தெரியாது. 9 மணியளவிற்கு சென்று விட்டு 5 நிமிடங்களில் வந்துவிட்டோம். தேவேந்திரனுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று தான் கூறினேன்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு

வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பழனிசாமி என்னையும் எனது சகோதரர் ராமமூர்த்தியையும் அவரது இடத்தில் உள்ள தேக்கு மரங்களை வெட்டி எடுத்து விற்பனை செய்வதாக சொல்லி அழைத்தார் என்று சொன்னால் சரிதான். நான் மரத்தை வெட்டி எடுப்பதற்கான பொருட்களுடன்தான் அங்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மரத்தை பார்த்து கொண்டிருந்தபோது தேவேந்திரன் அங்கு வந்து மரத்தை வெட்டக்கூடாது என்று சத்தம் போட்டார் என்று சொன்னால் சரிதான். அப்போது தேவேந்திரன் பழனிசாமியிடம் எனக்குண்டான பாக இடத்தை கொடுத்துவிட்டு மரத்தை வெட்டிக் கொள் என்று சொன்னாரா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது பழனிசாமி பத்திரம் தானே வேண்டும் என்று சொல்லிவிட்டு கத்தியை எடுத்து கொண்டு வந்து தேவேந்திரனின் வயிற்றின் இரண்டு பக்கங்களிலும் கத்தியால் குத்தினார் என்றும் அதை நாங்கள் பார்த்தோம் என்று சொன்னால் சரியல்ல. பழனிசாமி தேவேந்திரனை கத்தியால் குத்தியபிறகுதான் நாங்கள் அந்த இடத்தை விட்டு சென்றோம் என்று சொன்னால் சரியல்ல். பழனிசாமி எங்களுடைய விற்பனையாளர் என்பதால் அவர் செய்த குற்றத்தை மறைத்து அவரை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

Sd/– சண்முகராஜ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.57/23 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.3 |
| பெயர் | ராமமூர்த்தி | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | ரெங்கசாமி | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.A.Chinnaiah, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 10.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- Dt.21.02.2025 the identity of the witness verified through his Aadhar card.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

புதுக்கோட்டை மாவட்டம் தொண்டைமான்விடுதியில் குடியிருந்து வரகிறேன். சாட்சி சண்முகராஜ் எனக்கு சித்தப்பா மகன். சண்முகராஜ் உடன் நான் மரம் வெட்டும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு தேவேந்திரனை தெரியும். ஆஜர் எதிரி பழனிசாமியை எனக்கு தெரியும். பழனிசாமி அவர் இடத்தில் உள்ள மரத்தை வெட்டுவதற்காக நானும் என்னுடைய சித்தப்பா மகன் சண்முகராஜ்ம் எதிரி பழனிசாமியின் தோப்பில் உள்ள தேக்குமரங்களை பார்ப்பதற்காக சென்றோம். 09.01.2022 தேதியில் காலை 9.00 மணியில் இருந்து 10.00 மணி இருக்கும். அப்போது அந்த இடத்தில் பழனிசாமியும், தேவேந்திரனும் இருந்தார்கள். நாங்கள் பார்வையிட வேண்டிய மரங்களை பழனிசாமி எங்களிடம் காட்டினார். அ்போது தேவேந்திரன் எங்களிடம் பழனிசாமிக்கும் தனக்கும் இட சம்மந்தமான பிரச்சனை இருப்பதால் மரங்களை பார்க்கவேண்டாம் என்று சொன்னார். நாங்கள் வந்துவிட்டோம். இருவருக்கும் இடையே என்ன நடந்தது என்று எங்களுக்கு தெரியாது. 9 மணியளவிற்கு சென்று விட்டு 5 நிமிடங்களில் வந்துவிட்டோம். தேவேந்திரனுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று தான் கூறினேன்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

பழனிசாமி என்னையும் எனது சகோதரர் சண்முகராஜ்யையும் அவரது இடத்தில் உள்ள தேக்கு மரங்களை வெட்டி எடுத்து விற்பனை செய்வதாக சொல்லி அழைத்தார் என்று சொன்னால் சரிதான். நான் மரத்தை வெட்டி எடுப்பதற்கான பொருட்களுடன்தான் அங்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மரத்தை பார்த்து கொண்டிருந்தபோது தேவேந்திரன் அங்கு வந்து மரத்தை வெட்டக்கூடாது என்று சத்தம் போட்டார் என்று சொன்னால் சரிதான். அப்போது தேவேந்திரன் பழனிசாமியிடம் எனக்குண்டான பாக இடத்தை கொடுத்துவிட்டு மரத்தை வெட்டிக் கொள் என்று சொன்னாரா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது பழனிசாமி பத்திரம் தானே வேண்டும் என்று சொல்லிவிட்டு கத்தியை எடுத்து கொண்டு வந்து தேவேந்திரனின் வயிற்றின் இரண்டு பக்கங்களிலும் கத்தியால் குத்தினார் என்றும் அதை நாங்கள் பார்த்தோம் என்று சொன்னால் சரியல்ல. பழனிசாமி தேவேந்திரனை கத்தியால் குத்தியபிறகுதான் நாங்கள் அந்த இடத்தை விட்டு சென்றோம் என்று சொன்னால் சரியல்ல். பழனிசாமி எங்களுடைய விற்பனை யாளர் என்பதால் அவர் செய்த குற்றத்தை மறைத்து அவரை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

Sd/– ராமமூர்த்தி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.